செய்தி வெளியீடு எண்: 525 நாள் : 01.10.2013

# செய்தி வெளியீடு

## நான்கு காவல்துறை அதிகாரிகளுக்கு காந்தியடிகள் காவல் பதக்கங்கள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 1) திரு. து.பெ. சுரேஷ்குமார், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், குற்றம் (பொறுப்பு), மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, ஈரோடு மாவட்டம், 2) திரு. A.V. மதி, காவல் துணை கண்காணிப்பாளர், மத்திய புலனாய்வுப் பிரிவு (தெற்கு), சென்னை, 3) திரு. ச. பெரியசாமி, காவல் ஆய்வாளர், மத்திய புலனாய்வுப் பிரிவு, சேலம் மண்டலம், சேலம் மற்றும் 4) திரு. ஆர். தேவராஜ், தலைமைக் காவலர், ஆப்பக்கூடல் காவல் நிலையம், ஈரோடு மாவட்டம் ஆகியோருக்கு, கள்ளச்சாராய ஒழிப்புப் பணியில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக காந்தியடிகள் காவலர் விருதுகள் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன விருது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2014–ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதைப் பெறுபவர்களுக்கு பதக்கங்களுடன், பரிசுத் தொகையாக தலா ரூ.20,000/–மும் வழங்கப்படும்.

(நிரஞ்சன் மார்டி)

அரசு முதன்மைச் செயலாளர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9